# வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.2775/ஆ2/2023, நாள்.17.08.2023

பொருள் பள்ளிக்கல்வி – விளையாட்டுப் போட்டிகள் – 2023–24 – ஆம் கல்வி ஆண்டில் அரசு / அரசு உதவி பெறும் / மெட்ரிக் / சுயநதி பள்ளிகள் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவ மாணவியர்களுக்கு – அனைத்து வகையான விளையாட்டுப் போட்டிகள் – மாவட்ட அளவில் – போட்டிகள் நடத்துதல் – சார்பு.

பார்வை 1. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் நா.க.எண்: 34753/M/S4/2023. நாள்: 04 – 07 – 2023

2. அரசாணை (நிலை) எண்: 175 பள்ளிக்கல்வி (ப.க.7(2)) துறை நாள்:25–09–2019

&&&&&&&&&

பார்வையில் காணும் அரசாணை மற்றும் செயல்முறைகளின் படி 2023–24 ஆம் கல்வி ஆண்டில் பள்ளிக்கல்வி துறையின் கீழ் இயங்கி வரும் அரசு / அரசு உதவி பெறும் / மெட்ரிக் / சுயநிதி நடுநிலை / உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளில் 6 வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் 14/ 17/ 19 வயது பிரிவில் உள்ள மாணவ / மாணவியர்களுக்கு அனைத்து வகையான விளையாட்டுப் போட்டிகள் வருவாய் மாவட்ட அளவில், குடியரசு தின / பாரதியார் தின குழு போட்டிகள், தடகளம் மற்றும் புதிய விளையாட்டுப் போட்டிகள் நடத்த கீழ்வரும் அறிவுரைகள் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்படுகிறது.

## மாவட்ட அளவிலான போட்டிகள்

அனைத்து வகையான பழைய விளையாட்டுப் போட்டிகள், (டென்னிஸ் நீங்கலாக) தடகளப் போட்டிகள், வளையப்பந்து, கடற்கரை கையுந்து பந்து மற்றும் கேரம் போட்டிகளில் குறுவட்ட அளவில் வெற்றி பெற்றவர்கள் வருவாய் மாவட்ட போட்டிகளில் பங்கு பெறுவார்கள்.

புதிய வகையான விளையாட்டுகள் நீச்சல், ஸ்குவாஷ், டேக்வாண்டோ, வால் சண்டை, ஜிம்னாஸ்டிக், ஜூடோ, குத்துச்சண்டை, சிலம்பம், சாலை மிதிவண்டி மற்றும் டென்னிஸ் போன்ற போட்டிகள் நேரடியாக வருவாய் மாவட்ட அளவில் நடத்தப்படும்.

மாவட்ட அளவிலான சதுரங்க போட்டிக்கு ஒவ்வொரு வயது பிரிவிலும் வட்ட அளவில் முதல் மூன்று இடங்களை பிடித்தவர்கள் அனுமதிக்கபடுவார்கள்.

வயது பிரிவு
U14 ------ 01.01.2010
U17 ------ 01.01.2007
U19 ------ 01.01.2005

ஒரு மாணவர் ஒரு வயது பிரிவில் ஒரு பழைய விளையாட்டிலும், ஒரு புதிய விளையாட்டிலும் மற்றும் தடகளப் போட்டிகளிலும் பங்கு பெறலாம்.ஒரு மாணவர் ஒரு வயது பிரிவில் தான் அனைத்து போட்டிகளிலும் பங்கு பெற வேண்டும்.

அனைத்து போட்டிகளுக்கான எடை பிரிவு மற்றும் போட்டிகளின் விவரம் நுழைவுப் படிவத்தில் உள்ளவாறு அனுமதிக்கப்படும்.

நேரடியாக வருவாய் மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளுக்கு, ஒவ்வொரு எடை பிரிவிலும் / போட்டிகளிலும் ஒரு பள்ளியில் இருந்து ஒரு மாணவ / மாணவியர்கள் பங்கு பெற அனுமதிக்கப்படுவார்கள்.

அறிவிக்கப்பட்ட நாளில் நடக்கும் போட்டிகளை சரியாக நடத்தி முடித்திட ஏதுவாக நடுவர்களாக பணிநியமிக்கப்பட்ட உடற்கல்வி இயக்குனர்கள் மற்றும் உடற் கல்வி ஆசிரியர்களை பணியில் இருந்து விடுவித்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளி மாணவிகளை அழைத்து வர பெண் உடற்கல்வி ஆசிரியர்கள் இல்லாத நிலையில் ஒரு பெண் ஆசிரியரை அனுமதித்து பாதுகாப்பான முறையில் மாணவ மாணவியர்களை அழைத்துச் சென்று போட்டியில் பங்கு பெற அறிவுறுத்தும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அனைத்து மாணவர்களையும் போட்டிகளுக்கு அழைத்து வரும் போது பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள சார்ந்த ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தும்படி தலைமை ஆசிரியர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அனைத்து போட்டிகளையும் நடுநிலையோடு நடத்தி முடித்திட வேலூர் மாவட்டத்தில் அனைத்து பள்ளிகளில் உள்ள உடற்கல்வி இயக்குனர்கள் மற்றும் உடற் கல்வி ஆசிரியர்களை மாற்றி நடுவர்களாக நியமிக்கும் போது உரிய ஆசிரியரை பணி விடுவிக்குமாறு சார்ந்த தலைமை ஆசிரியர்களை கேட்டுக்கொள்கின்றேன்.

## விளையாட்டுப் போட்டிக்கான பொது விதிமுறைகள்

1. போட்டிகளில் பங்கு பெறும் அணிகள் போட்டி ஆரம்பிப்பதற்கு 30 நிமிடங்கள் முன்பாக போட்டி நடக்கும் இடத்திற்கு வருகை புரிதல் வேண்டும்.
2. அனைத்து போட்டிகளிலும் நடுவர்கள் முடிவே இறுதியானது
3. மாணவர்களின் பிறந்த தேதியில் மாற்றம் மற்றும் ஆள் மாறாட்டம் போன்ற முறைகேடுகள் செய்யும் பள்ளி, கலந்து கொண்ட போட்டிகளில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவதோடு, எதிர்வரும் போட்டிகளில் பங்கேற்பதில் இருந்து 3 ஆண்டுகள் வரை தடை செய்யப்படும். மேலும் முறைகேடுகளில் ஈடுபடுபவரின் மேல் கடுமையான துறை சார்ந்த நடவடிக்கை எடுக்கப்படும்.
4. உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குனர்கள் மட்டுமே அணி மேலாளராக செயல்படலாம். மேலும் பிற பாட ஆசிரியரை நியமிக்க முறையான காரணத்துடன் உரிய வழிகாட்டுதலில் செயல்படலாம். எக்காரணம் கொண்டும் பெற்றோர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் அணி மேலாளர்களாக நியமிக்க அனுமதி இல்லை.
5. நுழைவுப் படிவம் உரிய முறையில் பூர்த்தி செய்து போட்டி நடைபெறும் அன்று காலை சரியாக 8:30 மணிக்குள் அந்தந்த போட்டி பொறுப்பாளர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும்.
6. எடை பிரிவிற்கான போட்டிகளில் மாணவர்களின் எடை, போட்டி நடைபெறும் அன்று காலை சரியாக 8:30 மணிக்குள் சரிபார்க்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட போட்டி நடைபெறும் நாள் மற்றும் இடம் கீழ் வருமாறு.

| வ எண் | போட்டி | நாள் | | நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| | | மாணவர்கள் | மாணவிகள் | |
| 1 | ஜிம்னாஸ்டிக் | 12.09.2023 | 12.09.2023 | மாவட்ட விளையாட்டு வளாகம் காட்பாடி |
| 2 | ஜூடோ | 12.09.2023 | 11.09.2023 | மாவட்ட விளையாட்டு வளாகம் காட்பாடி |
| 3 | குத்துச்சண்டை | 12.09.2023 | 11.09.2023 | மாவட்ட விளையாட்டு வளாகம் காட்பாடி |
| 4 | வாள் சண்டை | 12.09.2023 | 12.09.2023 | மாவட்ட விளையாட்டு வளாகம் காட்பாடி |
| 5 | டேக்வான்டோ | 12.09.2023 | 12.09.2023 | மாவட்ட விளையாட்டு வளாகம் காட்பாடி |
| 6 | சதுரங்கம் | 26.10.2023 | 27.10.2023 | வி.ஐ.டி பல்கலைக்கழகம் |
| 7 | ஸ்வாஷ் | 26.10.2023 | 27.10.2023 | வி.ஐ.டி பல்கலைக்கழகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | கேரம் | 26.10.2023 | 27.10.2023 | வி.ஐ.டி பல்கலைக்கழகம் |
| 9 | கடற்கரை கையுந்து பந்து | 26.10.2023 | 27.10.2023 | வி.ஐ.டி பல்கலைக்கழகம் |
| 10 | வளைய பந்து | 26.10.2023 | 27.10.2023 | வி.ஐ.டி பல்கலைக்கழகம் |
| 11 | சாலை மிதிவண்டி | 06.10.2023 | 06.10.2023 | பள்ளிக்குப்பம் கேட் |
| 12 | நீச்சல் | 26.10.2023 | 27.10.2023 | வி.ஐ.டி பல்கலைக்கழகம் |
| 13 | பழைய விளையாட்டுப் போட்டிகள் | 11.10.2023 | 13.10.2023 | வி.ஐ.டி பல்கலைக்கழகம் |
| 14 | தடகளப் போட்டிகள் | 19.10.2023 | 20.10.2023 | CMC ஓவல் கிரவுண்ட் பாகாயம் |
| 15 | சிலம்பம் | 07.10.2023 | 14.10.2023 | ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலை பள்ளி,VLR |
| 16 | கபடி | 17.10.2023 | 19.10.2023 | விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி அணைக்கட்டு |

17/8/23

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

17/8/23

17/8/23

பெறுநர்

அனைத்து வகை பள்ளி தலைமை ஆசிரியர்கள்.

நகல் மாவட்ட கல்வி அலுவலர் வேலூர் (இடைநிலை / தொடக்கக்கல்வி / தனியார் பள்ளிகள்) தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் நகல் அனுப்பலாகிறது.

நகல் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் வேலூர் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காகவும், தொடர் நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.

நகல் முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் சென்னை அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.